# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2387/35 - 2024 ජුනි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.06.06

*2387/35 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2024, யூன் 05.


1A - PG 6717 — 404 (2024/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் "**2024 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்**" என அழைக்கப்படும்.

2. திருத்தம் செய்யப்பட்ட, 2023, சனவரி 01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் திருத்தம் செய்யப்படுகிறது.

3. முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரின் 2024 மே மாதம் 22 ஆம் திகதிய 24/0983/631/019-I ஆம் இலக்க விஞ்ஞாபனத்திற்கு 2024, மே மாதம் 22 ஆம் திகதி வழங்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய இவ் ஒழுங்குவிதிகள் வெளியிடப்படுகின்றன.

4. மேற்குறிப்பிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளில் 9 ஆம் இலக்க ஒழுங்குவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரின் 2023, மாச்சு மாதம் 22 ஆம் திகதிய 23/0585/631/008-I ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பின் படி 2023 மாச்சு மாதம் 27 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்ட, "நடைமுறை மீள் ஏற்றுமதி நோக்கத்திற்காக பாக்கு செயன்முறைப்படுத்தும் கைத்தொழில்" இன் படி வெளியிடப்பட்ட அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தினால், உள்நாட்டு சந்தையில் வேறு எந்த வகையிலும் நேரடியாக அல்லது மறைமுகமாக விற்பனை செய்யும் நோக்கத்திற்கல்லாது, இயைபு முறைக் குறியீட்டில் நான்கு (04) இலக்கத்தினாலான மாற்றத்துடன் ஆகக் குறைந்தது 35% உள்நாட்டு பெறுமதி சேர்த்தலுடன் மற்றும் அந்நடைமுறையின் ஏனைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ், செயன்முறை மற்றும் மீள் ஏற்றுமதி செய்யும் நோக்கத்திற்காக, அவ் ஒழுங்குவிதிகளில் V ஆம் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள இயைபு முறைக் குறியீடு 0802.80.90 - பிற (உலர்த்திய, கோது நீக்கிய மற்றும் சூடேற்ற செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட) இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பாக்கு இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமம் வழங்கப்பட வேண்டும்.

5. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு, உரிமம் பெற்ற வங்கிகளுக்கு மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களுக்கு "செயற்பாட்டு ஆலோசனைகள்" வழங்கப்பட வேண்டும்.

6. இவ் ஒழுங்குவிதிகள் தொடர்பாக எழுகின்ற எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதி முடிவானது இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.

EOG 06 - 0116

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.